# FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8073065

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

District : மாவட்டம் கன்னியாகுமரி
PS: காவல்நிலையம் V&AC Nagercoil
Year: ஆண்டு 2019
FIR No.: மு.த.அ. எண் 4/2019
Date: நாள் 27.06.2019

(i) Act சட்டம்: குற்றவியல் நடைமுறை சட்டம் Sections பிரிவுகள்: 102 Cr.P.C r/w 7 of the PC Act 1988 (As amended 2018)

(ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் (திருத்தம் 2018) Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

(a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 14.02.2019
Date to : நாள் வரை 14.02.2019

Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 17.00 hrs
Time to : நேரம் வரை 22.30 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.02.2019
Time : நேரம் 23.30 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : நேரம்

Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்துமூலமாக

Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — Verkilambi Town Panchayat Office. North West about 22 kms

Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — A.ராஜாசிங் வட்டாட்சியர் கல்குளம் தாலுகா
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் வட்டாட்சியர் கல்குளம் தாலுகா
(g) Address : முகவரி கல்குளம் தாலுகா கன்னியாகுமரி மாவட்டம்.

Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திருமதி.மாலதி, செயல் அலுவலர்,
வேர்கிளம்பி பேரூராட்சி,
நாகர்கோவில் மண்டலம், கன்னியாகுமரி மாவட்டம்.

Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- இல்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

எதிரி
திருமதி..மாலதி,
செயல் அலுவலர்,
வேர்கிளம்பி பேரூராட்சி,
நாகர்கோவில் மண்டலம்,
கன்னியாகுமரி மாவட்டம்

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நான் 14.02.2019-ம் தேதி இரவு சுமார் 23.30 மணியளவில் அலுவலக பணியில் இருந்தபோது திரு.A.ராஜாசிங், தாசில்தார், கல்குளம் தாலுகா அவர்கள் என்முன் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவையும் அத்துடன் இணைக்கப்பட்ட செயல் முறை நடவடிக்கை, ஆவணங்கள் மற்றும் கைப்பற்றப்பட்டபணம் ரூபாய் 1,00,000/- ஆகியவற்றை பெற்று அந்த புகார்மனுவில் குறிப்பிட்டுள்ள மார்ஜினில் குறிப்பட்டுள்ள அரசு அலுவலர் மீது நடவடிக்கை எடுக்க ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு 17A(1)(c) படி சம்பந்தப்பட்ட துறை தலைவரின் முன் அனுமதி பெற ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநர் அலுவலகத்துக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி அதன்படி இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களது குறிப்பாணை SC.No.7011/2019/TP/KK, dated. 20.06.2019 பெற்று இன்று 27.06.2019 பிற்பகல் 18.30 மணிக்கு கன்னியாகுமரி பிரிவு கு.எண். 4/2019 u/s 102 Cr.P.C r/w 7 of the P.C Act 1988 (as amended in 2018)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
27/06/19

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G.MATHIALAGAN,
Rank: நிலை D.S.P......No. எண் ..........
V&AC,
Nagercoil.

**எதிரி**
**திருமதி..மாலதி,**
**செயல் அலுவலர்,**
**வேர்கிளம்பி பேரூராட்சி,**
**நாகர்கோவில் மண்டலம்,**
**கன்னியாகுமரி மாவட்டம்**

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நான் 14.02.2019-ம் தேதி இரவு சுமார் 23.30 மணியளவில் அலுவலக பணியில் இருந்தபோது திரு.A.ராஜாசிங், தாசில்தார், கல்குளம் தாலுகா அவர்கள் என்முன் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவையும் அத்துடன் இணைக்கப்பட்ட செயல் முறை நடவடிக்கை, ஆவணங்கள் மற்றம் கைப்பற்றப்பட்டபணம் ரூபாய் 1,00,000/- ஆகியவற்றை பெற்று அந்த புகார்மனுவில் குறிப்பிட்டுள்ள மார்ஜினில் குறிப்பட்டுள்ள அரசு அலுவலர் மீது நடவடிக்கை எடுக்க ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு 17A(1)(c) படி சம்பந்தப்பட்ட துறை தலைவரின் முன் அனுமதி பெற ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்பு துறை இயக்குநர் அலுவலகத்துக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி அதன்படி இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களது குறிப்பாணை SC.No.7011/2019/TP/ KK, dated. 20.06.2019 பெற்று இன்று 27.06.2019 பிற்பகல் 18.30 மணிக்கு கன்னியாகுமரி பிரிவு கு.எண். 4/2019 u/s 102 Cr.P.C r/w 7 of the P.C Act 1988 (as amended in 2018)

ஆக எதிரி திருமதி. மாலதி, செயல் அலுவலர், வேர்கிளம்பி பேரூராட்சி என்பவர்மீது வழக்கு பதிவு செய்தேன். மேற்படி புகார்புகார் மனு விபரம் பின்வருமாறு. அனுப்புநர் A.ராஜாசிங், வட்டாட்சியர், கல்குளம், கன்னியாகுமரி மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில். ஐயா, பொருள்: வேர்கிளம்பி பேரூராட்சி அலுவலகத்தில் 14.02.2019 இன்று திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது- நடவடிக்கை எடுக்க கேட்டல் - தொடர்பாக. கன்னியகுமரி மாவட்டம் கல்குளம் தாலுகாவிற்குட்ப்பட்ட வேர்கிளம்பி பேரூராட்சியில் செயல் அலுவலர் பேரூராட்சி ஒப்பந்தப்பணிகளை ஒதுக்கீடு செய்ய ஒப்பந்தக்காரர்களிடம் பணம் பெறுவதாக கிடைத்த தகவலின் பேரில் இன்று 14.02.2019 பிற்பகல் 17.00 மணிமுதல் இரவு 22.30 மணிவரை கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர், ஆய்வாளர்கள் மற்றம் பார்ட்டி சகிதம் வேர்கிளம்பி பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.மாலதி அவர்களது அலுவலகத் தில் திடீர் இணை ஆய்வு செய்து செயல் அலுவலர் அறையை சோதனையிட்டு கணக்கில் காட்டாத பணம் ரூ.1,00,000/- இருந்ததற்கு அவர் தகுந்த முகாந்திரம் கூறாததால் அது லஞ்ச பணமாக இருக்கலாம் என கருதி சோதனையின் போது தயார் செய்யப்பட்ட செயல் முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. அத்துடன் விசாரணைக்கு தேவையான ஆவணங்களும் கைப்பற்றப்பட்டது.

அப்போது தயார் செய்த செயல் முறை நடவடிக்கையும், கைப்பற்றப்பட்ட லஞ்ச பணம் ரூ.1,00,000/- மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்களுடன் வேர்கிளம்பி பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.மாலதி என்பவர் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க கேட்டு இப்புகாரை சமர்ப்பிக்கிறேன். ஒப்பம்.. தேதி 14/02/2019 தாசில்தார் கல்குளம், கன்னாகுமரி மாவட்டம். 14.02.2019 வேர்கிளம்பி.

Sir, Received the complaint on 14.02.2019 at 23.30 hrs and send the copy of the petition and copy of the proceedings to DVAC for obtaining permission from the Head of the Department to register the case under the provision of sec. 17A of the Prevention of corruption Act 1988 (as amended in 2018). S/d.14/02/2019, DSP, V&AC, Nagercoil.

Sir, Received the memorandum in SC No.7011/2019/TP/KK, dt.20.06.2019 of DVAC, on 26.06.2019 to register the case. After receiving memo, the seized amount which was deposited in the Treasury was returned back on today 27.06.2019 and a case in Kanyakumari V&AC Cr.No.4/19 u/s 102 Cr.P.C r/w 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) was registered on today 27.06.2019 at 13.30 hrs. S/d dt.27/06/19, DSP. V&AC, Nagercoil.

<u>கன்னியாகுமரி மாவட்டம் கல்களம் வட்டாட்சியர் அவர்களின் செயல்முறை நடவடிக்கை</u>

14.02.2019-ம் தேதி பிற்பகல் சுமார் 17.00 மணியளவில் கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டம் வேர்கிளம்பி கல்லங்குழியில் அமைந்துள்ள வேர்கிளம்பி பேரூராட்சி அலுவலகத்தில் கீழ்க்கண்ட அலுவலர்கள் முன்னிலையில் நடைபெற்ற தீடீர் தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கை குறிப்பு.

<u>முன்னிலை:</u>

1) திரு.A.ராஜாசிங், வட்டாட்சியர், கல்குளம், கன்னியாகுமரி மாவட்டம்.

2) திரு.G.மதியழகன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில்.

3)திரு.J.ராஜு, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில்.

4)திருமதி.T.T.ரெமா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில்.

கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டம் வேர்கிளம்பி கல்லங்குழியில் அமைந்துள்ள வேர்கிளம்பி பேரூராட்சி அலுவலகத்தின் செயல் அலுவலர் திருமதி மாலதி என்பவர் ஒப்பந்தக்காரர்களிடம் அவர்களுக்கு வேலை வழங்குவதற்கு நேரடியாக லஞ்சம் பெற்று வருவதாக ரகசிய தகவல் கிடைத்ததன் அடிப்படையில் இன்று 14.02.2019-ம் தேதி பிற்பகல் சுமார் 16.30 மணிக்கு கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டம் வேர்கிளம்பி கல்லங்குழியில் தெற்கு பார்த்த வாசல் கொண்ட தரைத்தளம் மற்றும் முதல்தளம் கொண்ட அரசு கட்டிடத்தில் இயங்கிவரும் வேர்கிளம்பி பேரூராட்சி அலுவலக வளாகத்துக்கு வந்து கண்காணித்து பின்னர் சுமார் 17.00 மணிக்கு அந்த அலுவலகத்தை திடீர் சோதனை ஆரம்பிக்கப்பட்டது. அந்த அலுவலக தரைத்தளத்தில் முதலில் ஒரு ஹாலும் அதன் மேற்கு பக்கம் கணினியும் அந்த ஹாலினை தொடந்து தெற்கு பக்கம் செயல் அலுவர் அறையும் ஹாலின் வடமேற்காக வரி வசூலிப்பவர் அறையும் ஹாலின் கிழக்கு பக்கமுள்ள அறையில் முதலில் பதிவறை எழுத்தர் மற்றும் இளநிலை உதிவியளார் இருக்கையும் அதை தொடர்ந்து தெற்கு பக்கம் கணினி அறையும் அமைந்துள்ளது. முதல் தளத்தில் மன்ற கூடம் அமைந்துள்ளது. செயல் அலுவலர் திருமதி.ச.மாலதி அவர்களது அறையானது சுமார் 13x12 அடி அளவுடையதாகும். அவரது இருக்கையானது அந்த அறையின் மேற்கு சுவரோரம் கிழக்கு பார்த்து இரண்டு டிராயருடன் கூடிய மரமேஜையுடன் அமைந்ததாகும். அந்த அறையின் கிழக்கு சுவரில் இரண்டு ஸ்டீல் பீரோவும் தென்மேற்கு மூலையில் ஒரு மர அலமாரியும் அமைந்துள்ளது. செயல் அலுவலரின் இருக்கைக்கு முன்னால் Plastic wire பின்னப்பட்ட இரண்டு மர சேர் போடப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தில் CCTV Camera பொருத்தப்படடு உள்ளது. அந்த அலுவலகத்தை கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை காவல் துணை கண்காணிப்பாளர் திரு.G.மதியழகன், ஆய்வாளர்கள் திரு.ஜெ.ராஜு, திருமதி.T.T.ரெமா ஆகியோர்கள் முன்னிலையில் கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டாட்சியர் திரு.A.ராஜா சிங் அவர்களால் திடீர் சோதனை செய்யப்பட்டது. சோதனையின் பொழுது பேரூராட்சி அலுவலர் திருமதி.ச.மாலதி ஆஜரில் இருந்தார். அவரை தவிர ஹாலின் மேற்காக அமைந்துள்ள கணினியை இயக்க தற்காலிக கணினி இயக்குபவர் செல்வி திவ்யாவும் கணினி அறையில் திரு.அஜில் பிரைட் மற்றும் CCTV Camera மற்றும் computer பொருத்தி அதனை சர்வீஸ் செய்ய வந்த நாகர்கோவிலில் உள்ள ஆகாஷ் நிறுவனத்தை சேர்ந்த திரு.சுரேஷ் என்பவரும் ஆஜரில் இருந்தார்கள். அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வந்த அலுவலர்களின் வருகை பதிவேட்டினை பார்வையிட்டதில் அனைவரும் ஆஜரில் உள்ளதாக உள்ளது. இந்த வருகை பதிவேட்டை முடிவு செய்து செயல் அலுவலர் திருமதி மாலதி அவர்கள் மேலொப்பம் செய்துள்ளார். இதில் கல்குளம் வட்டாட்சியர் அவர்கள் தணிக்கை செய்து கையொப்பம் இட்டார். அதுபோல கால தாமத வருகை பதிவேட்டை பார்வையிட்டதில் எந்த நபரும் கால தாமதமாக வரவில்லை. அந்த

பதிவேட்டிலும் கல்குளம் வட்டாட்சியர் அவர்கள் தணிக்கை செய்து கையொப்பம் இட்டார். செயல் அலுவலரின் நாட்குறிப்பு பதிவேட்டை பார்வையிட்டதில் 14.02.2019 தேதியில் எந்த குறிப்பும் எழுதவில்லை. அந்தபதிவேட்டையும் கல்குளம் வட்டாட்சியர் அவர்கள் தணிக்கை செய்து அதில் கடைசி பக்கத்தில் கையொப்பம் இட்டார். மேலும் செயல் அலுவலா் திருமதி.மாலதி அவர்களது அறையை சோதனை செய்ததில் அவரது இருக்கையின் முன்னால் போடப்பட்டிருந்த இரண்டு டிராயருடன் கூடிய மரமேஜையின் இடது பக்க டிராயரை சோதனை செய்தபோது அதில் Mobile Garden என்று கருப்பு மையில் அச்சிடப்பட்ட சிவப்பு கலா் Polythene cover-ல் 100 தாள் வீதம் இரண்டு கட்டு 500 ரூபாய் நோட்டுக்கள் மொத்தம் ரூபாய் **1,00,000/-** இருந்தது. இந்த திடீர் சோதனையின் பொழுது மேற்படி பணத்தை பற்றி செயல் அலுவலா் திருமதி.மாலதி அவர்களிடம் கேட்டதற்கு அவா் தான் பிற்பகலில் அலுவலகத்துக்கு வந்திருந்த பேரூராட்சிகளின் உதவி இயக்குநருடன் அலுவல் நிமித்தமாக வெளியே சென்றதாகவும் சுமார் ஒருமணி நேரம் கழித்து வந்ததாகவும் அதனால் அந்த பணம் தனது மேஜை டிராயரில் எவ்வாறு வந்தது என்று தெரியாது என்றும் தெரிவித்தார். அவருடைய விளக்கம் திருப்பத்திகரமாக இல்லாததாலும் அதற்கு தகுந்த முகாந்திரம் கூறாததால் அந்த பணம் லஞ்சமாக பெற்றதாக இருக்கலாம் என்பதால் மேல் விசாரணைக்காக அந்த ரூபாயை இந்த செயல் முறை நடவடிக்கைமூலம் கைப்பற்றப்பட்டது.

மேலும் செயல் அலுவலரின் மேஜையின்மீது காணப்பட்ட கனிமம் மற்றும் சுரங்க நிதி திட்டத்தின் கீழ் சாலைகள் மேம்படுத்துதல் பணிகள் தொடர்பாக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை பார்வையிட்டபோது ஒப்பந்தக்காரர்கள் சமர்ப்பித்த ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின் படி தேவையான விபரங்கள் தகுதியாக இல்லாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்பட்டு தகுதிவாய்ந்த ஒப்ப்ந்தப்புள்ளிகள் மட்டும் தனியாக பிரிக்கப்பட்டு மேஜையில் வைக்கப் பட்டிருந்தது. எனவே அவ்வாறு தனியாக பிரித்து வைக்கப்பட்டிருந்த ஒப்பந்தப் புள்ளிகள் மற்றும் அந்தந்த வேலைகளுக்குரிய 13 செக் லிஸ்ட் மற்றும் அவற்றில் 12 வேலைகளுக்கான தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகள் ஆகியவை விசாரணைக்காக கைப்பற்ப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட தகுதிவாய்ந்த ஒப்பந்த புள்ளிகளில் பெரும்பாலானவை முத்திரை உடைக்கப்படாமல் காணப்பட்டது. இன்று இந்த சோதனையின் பொழுது வேர்கிளம்பி பேரூராட்சி அலுவலகத்துக்கு வெளி அலுவல் முடித்து உள்ளே வந்த திருமதி.கிரிஜா என்பவாரது கைபையை சோதனையிட்டபோது அவரிடமிருந்த மொத்த பணம் ரூபாய் 26,192-க்கு அவா் வரிப்பணம் வசூல் செய்தது என்று கணக்கு காட்டியதால் அந்த பணம் அரசு பணம் என்பதால் அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. அதுபோல கணினி ஆப்பரேட்டர் திரு.அஜில் பிரைட் என்பவரிடமிருந்து ரூபாய் 80/- அவரது சொந்த பணம் என்பதால் அந்தப்பணம் கைப்பற்றப் படவில்லை. மேலும் கணினி இயக்குபவர் செல்வி திவ்யா என்பவரிமிருந்த பணம் ரூபாய் 1,61,957/-

பற்றி விசாரித்தபோது அந்த பணமும் இன்றைய வரி வசூல் தொகை என்று கூறியதால் அதை சரிபார்த்துவிட்டு அதை அவரடைமே திரும்ப கொடுக்கப்பட்டது.

வேர்கிளம்பி பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.மாலதி என்பவரை விசாரித்து அவரிடம் ஒரு வாக்குமூலம் பெறப்பட்டது. இன்று வேர்கிளம்பி பேரூராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வுகளை பார்வையிட இந்த அலுவலகத்தில் பொருத்தப்பட்டுள்ள CCTV Camera வின் Hard Disc தேவைப்படுவதாக கேட்டபோது இன்று அலுவலகத்தில் இருந்த CCTV Camera பொருத்திய ஆகாஷ் நிறுவனத்தை சார்ந்த சுரேஷ் என்பவர் செயல் அலுவலர் திருமதி.மாலதி என்பவரிடம் CCTV Camera வின் Hard Disc இருக்கும் DVR Rack-ன் Key எங்கு வைத்துள்ளார் என்று தெரியாது என்றும் அதை தேடிபார்த்து CCTV Camera வின் Hard Disc –ஐ எடுத்து ஒப்படைப்பதாகவும் தெரிவித்ததால் அந்த CCTV Camera வின் Hard Disc-ஐ விசாரணைக்காக விரைவில் ஒப்படைக்க அறிவுறுத்தப்பட்டது. மேலும் சோதனையின்போது

<u>கீழ்கண்ட பணம்/ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.</u>

Mobile Garden என்று கருப்பு மையில் அச்சிடப்பட்ட சிவப்பு கலர் Polythene cover மற்றும் அதனுள் இருந்த 500 ரூபாய் நோட்டுக்கள் 200 எண்ணம் மொத்தம் ரூபாய் **1,00,000-** கைப்பற்றப்பட்டது.

**<u>ஆவணங்கள்:</u>**

**1)** பேரூராட்சி அலுவலக பணியாளர்கள் வருகை பதிவேடு ஜனவரி-2016 முதல் பெப்ருவரி2019 வரை,
2) பேரூராட்சி அலுவலக பணியாளர்கள் காலதாமத வருகை பதிவேடு ஜனவரி-2019 முதல் பெப்ருவரி2019 வரை மற்றும்
3) செயல் அலுவலர் நாட்குறிப்பு பதிவேடு 01.04.2018 முதல் 12.02.2019 வரை.
4) கனிமம் மற்றும் சுரங்கம் நிதி திட்டத்தின் கீழ் சாலைகள் மேம்படுத்துதல் பணிகள் தொடர்பான 19.01.2019 தேதியிட்ட வேர்கிளம்பி பேரூராட்சி அலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும்
5) 13 செக் லிஸ்ட் மற்றும் அவற்றில் 12 வேலைகளுக்கான தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகள் ஆகியவை விசாரணைக்காக கைப்பற்ப்பட்டது.

இந்த திடீர் சோதனையின் மூலம் வேர்கிளம்பி பேரூராட்சி அலுவலகத்தில் இருந்த செயல் அலுவலர் திருமதிமாலதி என்பவர் ஒப்பந்தக்காரர்களிடம் வேலை உத்தரவு வழங்க லஞ்சம் பெறுவதாக தெரிய வருகிறது. மேலும் பொது ஊழியரான செயல் அலுவலர் அரசு பணியை செய்ய லஞ்சம் பெற்று குற்றமுறு நடவடிக்கையில் (Criminal Misconduct) ஈடுபட்டு வருவதாகவும் தெரியவருகிறது. இந்த நடவடிக்கை குறிப்பு லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட மடி கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட பிரிண்டர் மூலம் வேர்கிளம்பி பேரூராட்சி அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் அறையில் உள்ள மின் இணைப்பு மூலம் பிரிண்ட் எடுக்கப்பட்டது. இந்த சோதனை

இன்று 14.02.2019-ம் தேதி இரவு 22.30 மணிக்கு முடிக்கப்பட்டது. S/d 14/02/2019, Tahsildar Kalkulam.

The original FIR, Complaint, Proceedings of the Tahsildar, Kalkulam Kanyakumari District, Memorandum in SC No.7011/2019/TP/KK, dt. 20.06.2019 of the DVAC were sent to the Honourable Chief Judicial Magistrate cum Special Judge Court, Kanyakumari District @ Nagercoil and copies sent to the concerned higher officials. S/d.27.06.2019 (G.MATHALAGAN) DSP, V&AC, Ngl.